Registered as a Newspaper

அழகிய கலைநயம் மிக்க புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி; 23628

கடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மார்கழி மீ 02 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1407 றபியு ஆகிர் பிறை 14 (17-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 18



# எம். ஜி. ஆரின் செல்வாக்கை பயன்படுத்தி தமிழர் அமைப்புகளை சரிப்படுத்த முயற்சி



## மத்திய அமைச்சர்கள் வெளிப்படையாகவே கேட்டனர்

சென்னை, டிச. 16

கிழக்கில் புதிதாகத் தமிழர் மாகாணம் ஒன்றை உருவாக்கும் இலங்கை அரசின் புதிய திட்டத்தைத் தமிழர் அமைப்புக்கள் ஒரே குரலில் நிராகரித்துவிட்டன.

தமிழர் தாயகக் கோட்பாட்டிலிருந்து விலக முடியாது என்றும் ஏகோபித்துத் தெரிவித்துவிட்டன.

அதனைத் தொடர்ந்து, தமிழர் அமைப்புகள் தமது நிலையில் இருந்து படி இறங்கி வருவதற்கு முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் தமது செல்வாக்கைப் பிரயோகிக்குமாறு கேட்கப்பட்டுள்ளார்.

திங்கட்கிழமை சென்னை வந்து பேச்சுக்களில் கலந்துகொண்ட இணை அமைச்சர்கள் திருவாளர்கள் பி. சிதம்பரமும், நத்வார் சிங்கும் இந்த வேண்டுகோளை எம். ஜி. ஆரிடம் வெளிப்படையாகவே விடுத்தனர்.

கடந்த திங்கட்கிழமை இணை அமைச்சர்கள் முதலமைச்சரைத் தனியே சந்தித்துப் பேசினர். அப்போதே இணை அமைச்சர்கள் இந்த வேண்டுகோளை விடுத்தனர்.

போராளிகளுடனான சந்திப்பின்போது இணை அமைச்சர் குழு கிழக்கில் ஒரு தமிழ் மாகாணத்தை அமைக்கும் இலங்கை அரசின் யோசனையை முன்வைத்தது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள தமிழர் பகுதிகளை பிரித்தெடுப்பதன் மூலம் கிழக்கில் தமிழருக்கு ஒரு பூரணமான தமிழ் மாகாணம் கிடைக்குமே என்று இந்திய அமைச்சர் குழு தமிழர் அமைப்புக்களிடம் வலியுறுத்தியது.

### நிராகரிப்பு

அதனை சகல தமிழர் அமைப்புக்களும் ஏகமனதாக நிராகரித்து விட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதுடில்லி திரும்பினர்

சென்னை, டிச. 16

தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தி விட்டு இந்திய இணை அமைச்சர் குழு நேற்றுக்காலை புதுடில்லி திரும்பியது.

பேச்சுக்களின் விவரங்களை பிரதமர் ராஜீவ் காந்தியிடம் குழு தெரிவித்த பின்னர் இக்குழு மீண்டும் நேற்று இரவு சென்னையை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

சென்னையில் இருந்தே இன்று இணை அமைச்சர் குழு கொழும்பு புறப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-எ)

## அமைச்சர் குழுவை சந்தித்த பிரதிநிதிகள்

சென்னை, டிச. 16

இணை அமைச்சர் குழுவைச் சந்தித்த ஆறு தமிழர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெயர் விவரம் வருமாறு;

தமிழீழ விடுதலைப் புலிகள்:-
வே. பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், திலகர்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்:-
உமா மகேஸ்வரன், சைமன்.

ஈழப்புரட்சி அமைப்பு:-
வி. பாலகுமார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

GLORIA TRAVELS

● கனடா ● நோர்வே
● பிரான்ஸ் ● ஜேர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
நோர்வே, கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND) விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

# புலிகள் - ஈ. பி. ஆர். எல். எவ். கிழக்கில் நேற்று மோதல்

யாழ்ப்பாணம், டிச. 17

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஈ. பி. ஆர் எல் எவ். இயக்கத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் நிகழ்ந்தன.

இதன் காரணமாக மட்டக்களப்பில் ஈ.பி.ஆர். எல்.எவ். உறுப்பினர்கள் நான்கு பேரும் அம்பாறையில் ஈ.பி ஆர் எல். எவ். உறுப்பினர்கள் ஐவரும் மரணமானார்கள்

இறந்தவர்களில் ஐந்து பேரது சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டுள்ளதாக புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஈ. பி. ஆர். எல் எவ். உறுப்பினர்கள் காடுகளுக்குள் ஓடி மறைந்து விட்டதாகவும் –

அவர்களைத் தேடி புலிகள் வலை விரித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் தற்பொழுது புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்தசெய்தி ஒன்று தெரிவிக்கிறது.

நேற்றைய மோதல்களின்போது ஈ. பி ஆர். எல். எவ். இயக்கத்தினரது ஆயுதங்கள் பலவற்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதாகவும் அறியவருகிறது.

இம் மோதல்களில் மேலும் பலர் இறந்திருக்கக் கூடும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## பொலீஸ் தாக்குதலைக் கண்டித்து

# அம்பாறையில் நேற்று முழு அளவில் ஹர்த்தால்

அம்பாறை, டிச. 17

அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லீம் பகுதிகளில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனையில் கடந்த சனிக்கிழமை முஸ்லிம்கள் மீது பொலீஸார் நடத்திய தாக்குதல் சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்தே இந்த ஹர்த்தாலுக்கு இஸ்லாமிய இளைஞர் இயக்கப் பேரவையின் கல்முனைத் தொகுதி ஒன்றியம் அழைப்பு விட்டிருந்தது.

சம்மாந்துறை, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, மருதமுனை ஆகிய பகுதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

தனியார் கடைகள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் இடமாற்றம் மே மாதத்தில்தான்

கொழும்பு, டிச 17

1987 ஜனவரியில் இருந்து நடைமுறைப் படுத்தப்படவிருந்த ஆசிரியர் இடமாற்றங்கள் மே மாதம் முதல் அமுல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரியில் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர் அதன் பின்னர்தான் இடமாற்றங்கள் அமுல் நடத்தப்படும். என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய ஆசிரியர் நியமனம் நடைபெறுவதற்கு முன்னர் இடமாற்றத் திட்டத்தை அமுல் நடத்தினால் கஷ்டப் பிரதேச

(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலும் ஒலிபெருக்கி வேண்டுகோள்

யாழ்ப்பாணம் டிச 17

கிழக்கு மாகாணத்திலும். தலைமறைவாகி உள்ள ஈ. பி. ஆர்- எல் எவ். உறுப்பினர்களை சரணடையுமாறு புலிகள் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்துவருகின்றனர்.

உங்கள் உயிருக்கு நாம் உத்தரவாதம் தருகிறோம். எம்மிடம் சரணடையுங்கள், என்று ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது

இதைத் தொடர்ந்து பல ஈ. பி. ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் சரணடைந்துவருகிறார்கள் என தெரிவிக்கப்படுகிறது

(உ-10)

## கிளிநொச்சி வரை படையினர் முன்னேற்றம்

யாழ்ப்பாணம், டிச. 17

வட பகுதி நோக்கி நடந்து வரும் சிப்பாய்கள் நேற்று கிளிநொச்சி வரை முன்னேறினர்.

திங்களன்று அனுராதபுரம், வவுனியா இராணுவ முகாம்களில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் வட பகுதியை நோக்கி நடந்து வந்தனர்.

புளியங்குளம், மாங்குளம் பகுதிகளில் தங்கி நின்ற சிப்பாய்கள் நேற்று மீண்டும் தமது நடையைத் தொடர்ந்தனர்.

பல தனியார்,இ.போ.ச. வாகனங்கள் முன்னேயும் பின்னேயும் செல்ல சிப்பாய்கள் தமது நடையைத் தொடர்ந்தனர்.

இதனால் நேற்று கிளிநொச்சிப் பகுதியில் பதற்றம் நிலவியது. (உ-10)

## புதிய மருத்துவக் கண்டுபிடிப்பு

# கண்ணாடியின்றியே பார்வை சரியாகும்

லண்டன், டிச.16

கண்பார்வைக் குறையுள்ளவர்கள் இனிக் கண்ணாடி பாவிக்க வேண்டியது இல்லை

லேசர் கதிர் சத்திர சிகிச்சை முறையினால் கண் பார்வைக் குறைவு உள்ளவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது.

அமெரிக்க - பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்கள் குழு ஒன்று லண்டன் பல்கலைக்கழகம் ஒன்றில் இப்புதிய சிகிச்சை முறையைக் கண்டு பிடித்துள்ளது.

இரண்டு ஆண்டுகளில் இந்த லேசர் சிகிச்சை முறை உலகம் முழுவதும் நடைமுறைக்கு வந்துவிடும். இப்படி வைத்திய நிபுணர் குழுத்தலைவர் டாக்டர் ஜோன் மார்ஷல் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

லேசர் சிகிச்சைக்கு ஆளானவர்கள் கண்ணாடி பாவிக்க வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் சொன்னார். (உ-எ)

## தமிழர் குழுக்கள் - இந்தியக் குழு

# பேச்சுக்கள் குறித்து பத்திரிகைகள் அதிருப்தி

சென்னை, டிச. 16

கடந்த திங்கள் தமிழர் அமைப்புக்களுடன் பல மணித்தியாலங்கள் இணை அமைச்சர் குழு நடத்திய பேச்சுக்கள் குறித்து தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் அதிருப்தி தெரிவித்தன.

தமிழர் அமைப்புக்களை நிர்ப்பந்திக்கும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளதா? என்று பத்திரிகைகள் கேள்வி எழுப்பிசெய்திகளைப் பிரசுரித்துள்ளன. இப்படி சென்னையில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன,

இணை அமைச்சர் குழு திங்கட்கிழமை தொடர்ந்து நள்ளிரவு வரை தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்களை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

(உ-ஐ-எ)

## இலங்கை இந்திய மோதல்

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையேயான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டி இன்று கான்பூரில் ஆரம்பமாகிறது. (உ-எ)

# தமிழர் தாயகத்தை விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை

## ஆறு அமைப்புகளும் ஒரே குரல்

சென்னை, டிச. 16

'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டில் விட்டுக்கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை.

ஆறு இலங்கைத் தமிழர் அமைப்புக்களும் இந்திய இணை அமைச்சர் குழுவைத் தனித்தனியே சந்தித்து இவ்வாறு ஒரே குரலில் அடித்துக் கூறினர்.

தமிழக முதலமைச்சர் எம். ஜி.இராமச்சந்திரன் முன்னிலையில் இந்திய இணை அமைச்சர்களை ஆறு தமிழர் அமைப்புக்களும் சந்தித்துத் தங்கள் நிலைப்பாட்டை வெளியிட்டன,

இப்பேச்சுக்கள் கடந்த திங்கள் இடம்பெற்றன.

வடக்கு — கிழக்கு இணைந்த தமிழர் தாயகமே எமது அடிப்படைக் கோரிக்கை.

இதில் விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இட

(4 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை இந்திய கிரிக்கெட் போட்டி கான்பூரிலே; பேச்சுப் போட்டி கொழும்பிலே. யார் யார், எது எதிலே வெல்லுகினம் எண்டு பார்க்கத்தானே போறோம்...?

## சுபநேரம்

17—12—1986
புதன்கிழமை
சுபநேரம்:
4.52 முதல் 6.22 வரை
ராகுகாலம்:
12.22 முதல் 1.52 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்
ஆருத்திரா தரிசனம்
திருவெம்பாவை
பத்தாம் நாள்

# தமிழ் இளைஞர் ஜேர்மனில் பலி!

வல்வெட்டித்துறை, டிச. 17

அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்த இமையாணன் தமிழ் இளைஞர் மேற்கு ஜேர்மனியில் விபத்து ஒன்றில் உயிரிழந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இமையாணன், அறிவாலயத்தைச் சேர்ந்த இந்த இளைஞனின் பெயர் கிருஷ்ணபிள்ளை இராசமூர்த்தி. வயது 27.

அரசியல் புகலிடம் கோரி இந்த இளைஞர் மேற்கு ஜேர்மனி முகாம் ஒன்றில் கடந்த ஒரு வருடகாலமாகத் தங்கி இருந்து வந்தார்.

விபத்து ஒன்றில் இவர் உயிரிழந்தார் என்று கடந்த ஞாயிறு மேற்கு ஜேமனியில் இருந்து உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

வேறு விவரம் எதுவும் தெரிவிக்கப்படாதபடியால் பெற்றோர் குழப்பமடைந்து கொழும்பில் உள்ள மேற்கு ஜேர்மன் தூதரகத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர். (எ-160)

## இந்தியக்குழு - ஜனாதிபதி

# மூன்று நாள் பேச்சு இன்று ஆரம்பமாகிறது

கொழும்பு, டிச. 17

இந்திய இணை அமைச்சர் குழு கொழும்பில் இன்று தொடக்கம் மூன்று நாள் பேச்சுக்களை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் நடத்தும்.

இந்திய அமைச்சர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்காக மூன்று தினங்களும் போதிய நேரங்களை ஒதுக்குவதாக ஜனாதிபதி ஏற்கனவே இந்தியத் தூதரிடம் கூறிவிட்டார்.

இந்தியக் குழுவில் இணை அமைச்சர்களான ப. சிதம்பரம், நட்வார் சிங், வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன். அரசியல் சட்டநிபுணர் பாலகிருஷ்ணன் ஆகியோருடன் இந்திய அரசு அதிகாரிகள் சிலரும் வருகின்றனர். (உ-எ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமையாணனுக்கு

# இடம் பெயர்ந்து வந்த அகதிகள் கஷ்ட நிலையில்

## போதிய உணவு இல்லையாம்

வல்வெட்டித்துறைடிச 17

தொண்டமானாறு, செருடாவில் மயிலிய தனை ஆகிய இடங்களில் இருந்து இராணுவ கெடுபிடிகள் காரணமாக இடம் பெயர்ந்து வந்துள்ள அகதிகள் பெரும் கஷ்ட நிலையை எதிர் நோக்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் உடுப்பிட்டியில் இருந்து இமையாணன் அரசினர் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

மேலும் மலசல கூட வசதிகள் போதுமானதாக இல்லாததால் வயல் வெளிகளையும் பாவிக்கும் பரிதாப நிலை ஏற்பட்டிருக்கிறது.

இவர்களை தற்போது பாதுகாத்துவரும் பிரஜைகள் குழு செயலர் திரு. வீ விஜயரத்தினம் இவர்களது கஷ்ட நிலை குறித்து எமது செய்தியாளரிடம் கவலை தெரிவித்தார்.

குறிப்பாக உணவுப் பிரச்சினையே பெரிதாக உள்ளதாகவும் கையிருப்பிலுள்ள உணவு வகைகள் இன்னும் ஒரு வாரத்திற்கே போதுமானதாக உள்ளதாகவும் அவர் கூறினர்.

பொது ஸ்தாபனங்கள் இவ் அகதிகளின் கஷ்டங்களைப் பார்க்கும் விதத்தில் உதவ முன்வர வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-160)

## சட்டவிரோத மின்பாவனை

### 13 பேர் மீது வழக்கு

ஊர்காவற்றுறை டிச 17

தீவுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்று வந்த பதின்மூன்று பேர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

சுருவில் கிராமிய நீதிமன்றத்திலேயே இவ்வழக்குகள் விசாரிக்கப்படும்.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி இவ் நீதிமன்றத்தில் முதலாவதாகபதின் மூன்று பேருக்கும் அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

சட்டவிரோதமான பலரின் பெயர்கள்சேகரிக்கப்பட்டுள்ளனவென்றும் விரைவில் வழக்குத் தொடரப்படும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது

சட்டவிரோத மின் பாவனையாளரிடமிருந்து இணைப்பு வயர்கள் பறிக்கப்பட்டபோதும் அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்துள்ளதுமேலும் அவர்கள் இச்செயலில் ஈடுபடாமல் இருக்கதூண்டும் எனவும் விடுதலைப் புலிகள் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (இ-16)


சேவை

மணமகன் - மணமகள் தேவைகளுக்கும் எப்பொருள்களானுலும் ஆதனங்களுட்பட வாங்கவும் - விற்கவும் - திட்டப் பரிசு விபரங்களுக்கும் எம்மை நாடுங்கள். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட், சந்திக்கு அருகாமையில் கோப்பாய்.


## செய்திக்கொத்து

### பரிசுபெற்றுர்

முள்ளியவளை டிச 17

மனித உரிமைகள் நிலையத்தாரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் பாலசிங்கம் பேராதரன் முதன்மைப் பரிசில்களில் ஒன்றினைப் பெற்றுர். (இ-93)

### ஓய்வுபெற்றுர்

யாழ்ப்பாணம் டிச 17

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியை திருமதி நாகேஸ்வரி பெர்ணண்டோ ஓய்வுபெற்றுர். (இ-75)

### பாலாவியில் திருட்டு முயற்சி தோல்வி

கொடிகாமம் டிச. 17

திருட்டுமுயற்சி தோல்வியடைந்தது

இச்சம்பவம்கச்சாயைச் சேர்ந்த பாலாவியில் நடைபெற்றது.

திருடரின்அரவம்கேட்டு வீட்டுக்காரர் ''கள்வர்'' என்று அபயக்குரல் எழுப்பவே திருடர் கோஷ்டி மின் வேகத்திற்பறந்தது.

ஆனுல் நலன் விரும்பிகளால் மடக்கிப்பிடிக்கப்பட்டதாக தெரியவருகிறது. (இ-75)

### முகாமில் பட்டம்

வல்வெட்டித்துறைடிச17

வல்வை இராணுவ முகாமில் சிவப்பு நிறபட்டம் ஏற்றப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

சிப்பாய்கள் இதற்குச் சுட்டுப் பயிற்சி பெறுவதாகச்சொல்லப்படுகிறது (இ-160)

### தையல் பொருட் காட்சி

வேலணை, டிச 17

புங்குடுதீவு பெருங்காடு மாதர் அபிவிருத்திச் சங்கத்தினரின் தையல் பொருட்காட்சியும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர் வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு பெருங்காடு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் மேற்படி சங்கத்தலைவி திருமதி ப. சற்குணம் தலைமையில் நடைபெறும்.

இவ்வைபவத்திற்கு பிரதம விருந்தினராக யாழ் கச்சேரி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் கலந்து கொள்வார். (இ-167)

கூட்டுறவு அபி உதவி ஆணையாளர்

## இட மாற்றத்தை ரத்துச்செய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச.17

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. ச. வேலாயுதம் பிள்ளையின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு பண்டத்தரிப்பு பரிஷ் தெ. ப உ. வி. கூ. சங்க நிர்வாகம் கூட்டுறவு அமைச்சரையும்; யாழ் அரச அதிபரையும்; கூட்டுறவு ஆணையாளரையும் கேட்டுள்ளது.

இது தொடர்பாக இவர்களுக்கு சங்கத்தலைவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்;

இவரது சேவைக் காலத்தில் தெங்கு பனம் பொருள் கூட்டுறவு உற்பத்திச்சங்கம் இலாபத்தில் இயங்கியது. இவரது இடமாற்றத்தால் இச்சங்கம் நஷ்டம் அடைந்து வீழ்ச்சியடையலாம் என நாம் அச்சமுறுகின்ருேம்.

மக்களின் நலனுக்காக உழைத்த இவரது இடமாற்றத்தை மறுபரிசிலனை செய்து உடன் தற்காலிகமாக ரத்துச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிருேம்.

இப்படி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஜெ செபஸ்ரியாம்பிள்ளை கேட்டுள்ளார். (இ-5)

# கிளிநொச்சியில் வீதிகள் சீர்கேடு

கிளிநொச்சி, டிச 17

கிளிநொச்சி பிரதான வீதிகள் சீர்கெட்டுள்ளதைத் தொடர்ந்து கிளிநொச்சி ஊடாக நடைபெற்று வந்த சகல போக்குவரத்துக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

பிரதான கண்டி வீதியில் கிளிநொச்சி கரடிப் போக்கு மதகு கடந்த ஜூன் மாதம் இனம் தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது

இதனுல் சகல போக்குவரத்துக்களும் உள்ளூர் வீதிகளுடாக நடைபெற்றன.

தற்போது மழைகாலம் ஆரம்பமானதால் உள்ளூர் பாதைகளூடாகவும் வாகனங்கள் செல்ல முடியாதவாறு சீர்கெட்டன.

கிளிநொச்சிக்கான போக்குவரத்து பரந்தனுடன் நிறுத்தப்பட்டது.

கிளிநொச்சி ஊடாக தென் பகுதிக்கும் வட பகுதிக்கும் நடத்தப்பட்ட போக்குவரத்துக்களும் பரந்தன், முல்லைத்தீவு ஊடாக செல்ல வேண்டியதாயிற்று

இந்த நிலையைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஜெகா செந்தில்நாதன் 86ஆம் ஆண்டு நிதியிலிருந்து சுமார் இரண்டு லட்சம் ருபாவை உள்ளூர் வீதிகள் இரண்டைத் திருத்துவதற்காக ஒதுக்கீடு செய்துள்ளார்.

பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட இப் பணத்திலிருந்து பரந்தன் முல்லைத்தீவு வீதியில் பூங்காவனச் சந்தியிலிருந்து வில்சன் வீதி வரை, பரந்தன் சந்தியிலிருந்து பூல் வீதி ஊடாக ஜெயந்தி நகர் வரையிலான இரண்டு வீதிகளுக்கும் கிறவல் பரவி திருத்தும் வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. (இ-76)

## புகைத்தல் மது அருந்தல் பற்றி கருத்தரங்கு

சாவகச்சேரி டிச. 17

புகைத்தல், மது அருந்துதல் பற்றிய கருத்தரங்கு பளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

கொத்தணி அதிபர் திரு. அ.பொ.செல்லையா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கு திருமதி புஷ்பா நவரத்தினத்தின் கொத்தணிக் கீதத்துடன் ஆரம்பமானது.

முதன்மை விருந்தினராகக் கல்விப்பணிப்பாளர் ஜனுப்.எம்.எம்'மன்சூரும் சிறப்பு விருந்தினர்களாக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கந்தசாமி லயன்ஸ் கழக தலைவர் டாக்டர். பே. பிலிப் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துரைகள் வழங்கினர்.

கொத்தணிச் சபையின் செயலாளர் திரு. வி. செல்வத்துரை நன்றி உரை கூறினர். (இ-31)

மக்கள் முகம்

## மந்துவில் மக்கள் ஒன்றியம்

கொடிகாமம், டிச. 17

மந்துவில் மக்கள் ஒன்றியம் யாழ். சனசமூக அபிவிருத்தி நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. செ. தவநாயகத்தால் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

உறுப்பினர்கள்: தலைவர் திரு. வே. இரத்தினசிங்கம்,உப தலைவர் திரு. இ நாகராசா, செயலாளர் திரு இரா. பத்மநாதன், உப செயலாளர் திரு. கு சிவஞானம், பொருளாளர் திரு. சி. மாணிக்கவாசகர், போஷகர் திரு. சி. மகாலிங்கம்,

நிர்வாக சபை உறுப்பினர் எட்டுப்பேர் தெரிவாகினர். (இ-75)

## கோப்பாய் லயன்ஸ் இலவச மூக்குக்கண்ணுடி

யாழ்ப்பாணம், டிச. 17

மல்லாகம், ஏழாலை, ஊரெவட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 29 பேருக்கு கோப்பாய் லயன்ஸ் கழகம் இலவச மூக்குக் கண்ணுடிகளை வழங்கியது.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சு ஸ்ரீ பாஸ்கரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் லயன்ஸ் கழகத் தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் மூக்குக் கண்ணுடிகளை விநியோகம் செய்தார்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் 25 பேருக்கு கோப்பாய் லயன்ஸ் கழகம் தென்னம்பிள்ளைகளை அன்பளிப்புச் செய்தது. (இ-எ)

# சிறுவரை சுதந்திரமாக வாழ விடவேண்டும்

## பாலர்பாடசாலை விழாவில் உரை

வட்டுக்கோட்டை, டிச 17

சிறுவர்களை அதிக கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாக இயங்கவிட வேண்டும். அப்போது தான் அவர்களிடம் மறைந்திருக்கும் ஆற்றலும் திறமையும் வெளிப்படும். அவர்கள் தமது காலத்தில் வீரதீர சுதந்திர புருஷர்களாக தலை நிமிர்ந்து நிற்பார்கள் கோழைகளாக- அடிமைகளாக அடிபணிய மாட்டார்கள்.

காரைநகர் திருச்சபை ஞானமுத்து பாலர்பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனுர் மகாவித்தியாலய அதிபர் திரு. செ தேவதாசன் மேற்கண்டவாறு கூறினுர்.

காரைநகர் திருச்சபை முதல்வர் வணக்கத்துக்குரிய போதகர் திரு. எஸ். ஜெயக்குமார் தலைமையில் விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினர் திரு செ. தேவதாசன் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது

இன்று உலகத்தில் பல்வேறு விதமான மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன இன்றைய காலகட்டம் ஒரு மறுமலர்ச்சி யுகம் ஆகும்.

தமிழர் வாழ்விலும் புதிய யுகம் ஏற்படுகிறது. அதற்கு ஏற்ப நாமும் எம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும். நாமும் உலகத்தில் தலை நிமிர்ந்து வாழ்வோம்.

இப்படி அவர் கூறினுர்.

வாரிவளவு நல்லியக்கச் சபை செயலாளர் திரு. எஸ் பத்மநாதன் அராலி இந்துக்கல்லூரி உப அதிபர் திரு எஸ். டானியல் உட்பட மற்றும்பலரும் உரையாற்றினர்.

பரிசு பெற்ற மாணவ மாணவிகளுக்கு பிரதம விருந்தினர் திரு. செ. தேவதாசன் பரிசில்களை வழங்கினுர். (இ-161)

### வீதி திருத்தப்படும்

புங்குடுதீவு, டிச 17

புங்குடுதீவில் கிழக்கில் குண்டும் குழியுமாகக் காட்சி தரும் பிரதான வீதி விரைவில் திருத்தியமைக்கப்படவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளைப் பெரும்தெருக்கள் திணைக்களம் மேற் கொண்டுள்ளது.

கடந்த பல வருடங்களாக இவ்வீதி திருத்தியமைக்கப் படாமையால் இப்பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குப் பெரும் சிரமங்களுக்குள்ளாகிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-131)


ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்- 21-12-86

(காலை 9 00 மணி)

(10 வகுப்புகள்—20 மணித்தியாலங்கள்)

ஆசிரியர்: T. N. பஞ்சாட்சரம்

* இலவச பாடக் குறிப்புகள்

* கட்டணம் ரூபா 100/-

ASTAN INSTITUTE

101, STANLEY ROAD, JAFFNA.

(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)


## துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கம்

101.7, பொது முகாமையாளர் பதவி: 600 — 40 X 10 — 1000

மேற்படி பதவிக்கு கீழே கொடுக்கப்பட்ட தராதரம், தகைமை உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

கல்வித் தகைமை: (1) 3 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவமுள்ள கூட்டுறவு ஊழியர் 8ஆவது சம்பளத் திட்டத்தில் உள்ள முகாமைத்துவ / மேற்பார்வை பதவியில் அல்லது 6 ஆண்டுகளுக்குக் குறையாத கூட்டுறவு ஊழியர் 9ஆவது சம்பளப் பதவியில் இருந்தவர்; அல்லது

(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பட்டம் அல்லது அதற்குச் சமமான கல்வித் தகைமையும் அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக / தொழிற்துறை ஸ்தாபனத்தால் வழங்கப்பட்ட நிர்வாகத்துறை 2 வருட அனுபவ சான்றிதழ்கள்:

அல்லது

(3) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/க.பொ.த. (உயர்தரம்) சித்தி 3 பாடங்களும் வர்த்தகம்/தொழில்துறை அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் நிர்வாக மட்டத்தில் 4ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம்.

வயது: 23 தொடக்கம் 50 வயது வரை.

பிணை: ரொக்கம் 3000/-

உறுதிப் பிணை: 10,000/-

சம்பளம்s $\frac{600 \times 1000}{40 \times 10}$

விண்ணப்பங்கள் யாவும் தலைவர், துணுக்காய்ப் பகுதி ப.நோ. கூ.சங்கம், துணுக்காய் என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூகம் அல்லது நேரடியாக 5-1-87 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் இடதுபக்க மேல் மூலையில் ''பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்'' என குறிக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு: சிங்களம், ஆங்கிலம் தேர்ச்சியுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்-

துணுக்காய் ப.ப.நோ.கூ. சங்கம், துணுக்காய்.






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

சத்திர சிகிச்சை நிபுணர்கள் கத்தி எடுத்து அறுப்பதற்கு முன் கையையும் கத்தியையும் நன்றாகத் தோஷமற துலக்கிக் கொண்டே வேலை ஆரம்பிப்பார்கள். அவ்விதமாகவே பொதுப்பணித் திட்டங்கள் போடுகிறவர்கள் முதலில் மனத்தை நன்றாகச் சுத்தம் செய்து கொள்ளவேண்டும்.

—பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

உதயன்

இல.15 உஆவது ஒழுங்கை, மின்சார நிலைய விதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24805, 22073

17-12-1986 த.பெ இல. 23

# அவசர தேவை!

தமிழ்ப் பகுதிகளில் கடந்த சனிக்கிழமை நடந்த சம்பவங்களின் சூடு ஒரு நாளிலேயே தணிந்து போயிருந்தது. பெரும் எண்ணிக்கையில் உயிரிழப்பு எதுவும் இல்லாததால் மக்கள், குறிப்பாக பெற்றோர்கள் பெரியளவில் பதற்றமடையாமல் இருந்தனர்.

எனினும் இந்தச் சம்பவம் குறித்து மக்களிடையே இரு வேறு கருத்துக்கள் உள்ளதை அவதானிக்க முடிகிறது. எந்த ஒரு விடயத்திலுமே சாதக, பாதகமான கருத்துக்கள் தெரிவிக்கப்படுவது வழக்கம். சனிக்கிழமைச் சம்பவங்களும் அதற்கு விதிவிலக்கல்ல.

சாதகத்திற்கு அதிக ஆதரவா அல்லது பாதகத்திற்கு அதிக ஆதரவா என்பதை மதிப்பிடுவது எமது எண்ணமல்ல.

நடந்தது ஏற்புடையதா அல்லவா என்பதைத் தீர்மானிப்பதற்கு இரு பக்கத்துக் காரண, காரியங்களின் விவரம் அவசியம். ஆனால் ஒரு சாராரின் முழுப்பக்கமே தெரியாத நிலையில் சரி, பிழை காண்பது பொருத்தமாகாது.

ஆனால் இது போன்ற சம்பவங்கள் இனியும் நடக்குமா? இவ்வாறு மக்கள் மனம் அச்சத்துடன் நோவு கண்டிருப்பதைக் காணமுடிகிறது.

அந்த அச்சமும், மனநோவும் இயற்கையானவை, நியாயமானவை.

இலங்கை என்ற நாடு 38 ஆண்டுகளுக்கு முன்னரே சுதந்திரம் பெற்ற போதிலும் தமிழர்கள் அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த நிலையைப் போக்குவதற்கு ஜனநாயக வழிகளை, அஹிம்சை வழிகளைக் கையாண்டு, தோல்வியுற்றுச் சலித்த நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் உரிமைகளை வென்றெடுக்க ஆயுதம் ஏந்த வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று.

உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்ற உத்வேகத்தில் தான், இளைஞர்கள் இயக்கங்களாயினர். தமது சொந்த நலன்களைத் துறந்து, தியாகம் செய்து உரிமைப் போரில் குதித்தனர்.

ஆனால் எங்கும் போலவே, எதிலும் போலவே இயக்கங்கள் பலவாகின. இது தமிழ் மக்கள் செய்த துரதிஷ்டங்களில் பெரும் துரதிஷ்டம். கீரைக் கடைக்கும் எதிர்க் கடை வேண்டும் என்பது ஒரு பேச்சு வழக்கு வாசகம். ஆனால் விடுதலை இயக்கங்களிடையேயும் போட்டி அவசியமா என்பது சற்று ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியது.

விடுதலை இயக்கங்களைப் பொறுத்த வரையில் எண்ணிக்கை எவ்வளவுக்குக் குறைவாக இருக்கிறதோ அதுவே நல்லது. அவையும் எதிர்க்கடைகளாக இருக்கலாமே அன்றி எதிரிக் கடைகளாக மாறக்கூடாது. அதாவது கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் விடுதலை என்ற இலட்சியத்தைத் தவிர்ந்த இலட்சிய வேறுபாடு இருக்கலாகாது. இலட்சிய வேறுபாடுள்ள இயக்கங்கள் பெருகினால் விடுதலைக்குப் பதில் அழிவுதான் முடிவாகும்.

அதேவேளை கருத்து வேற்றுமை காரணமாக இயக்க மோதல்களை அனுமதிக்கவும் முடியாது. அது மக்கள் நலனுக்குப் பெரும் குந்தகமானது. இலட்சியத்தை வென்றெடுப்பதற்குத் தடைக்கல்லாக அமையும்.

இந்தக் கருத்தை இதே பத்தியில் சரியாக ஐந்து நாட்களுக்கு முன்னர் வெகு தெளிவாக எடுத்துக் கூறியிருந்தோம்.

எல்லோரும் மக்களுக்காகவே பணியாற்ற முன்வந்தோம் என்ற எண்ணம் மேலோங்குமானால் இயக்க மோதல்கள் ஏற்படமுடியாது—

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கருத்து வேற்றுமை ஏற்பட்டாலுங் கூட, அவற்றைக் குறுகிய கால எல்லைக்குள் தீர்க்கக்கூடிய புரிந்துணர்வு அவசியம்.—

மக்களைப் பங்காளராகுமாறு கேட்டுவிட்டு, இளைஞர்கள் தமக்குள் சச்சரவுப்பட்டால் அர்த்தம் என்ன?—

இதனை உணர்ந்து சகல இயக்கங்களையும் சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்து ஒற்றுமையுடன் இயங்குமாறு மக்கள் சார்பில் கேட்டுக் கொண்கிறோம்.—

இவ்வாறு அப்போது வலியுறுத்தி இருந்தோம்.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு என்பதையும்—

'அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு என்பதையும் நினைவு படுத்தி —

இனிமேலாவது இவ்வித துரதிஷ்ட சம்பவங்கள் நடக்காமல் இருக்கப் பார்ப்பது ஒவ்வொரு தமிழ்ப்போராளியினதும் கடமை என வலியுறுத்திக் கூற விரும்புகிறோம், அவசிய தேவையும் அதுவே. அதனை உறுதி செய்து கொள்ளும் பங்கு மக்களுக்கும் உண்டு.

## சயரோக சங்கக் கூட்டம்

காங்கேசன்துறை டிச 17

இலங்கை சயரோக நிவாரண தேசிய சங்க வலி. வடக்குக் கிளையின் புனரமைப்புப் பொதுக் கூட்டம் 19ஆம் திகதி தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெறும்.

வலி. வடக்கு உதவி அரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பிரதம விருந்தினர்களாக சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரனும் தெல்லிப்பழை ப. நோகூசங்கத்தலைவர் திரு எஸ். சிவமகாராசாவும் கலந்து கொள்வார்கள்.

ஈரான் ஆயுத விற்பனை விவகாரம்:

# முக்கியமான சாட்சிக்கு திடீரென்று நோய்!

## விசாரணையை மழுங்கடிக்கும் நோக்கமா?

வாஷிங்டன், டிச. 16

அமெரிக்க செனட் உளவுக் குழுவின் முன்பாக இன்று சாட்சியம் அளிக்கவிருந்த அமெரிக்க மத்திய உளவு இலாகா (சி.ஐ.ஏ.) தலைவர் வில்லியம் காஸே திடீரென நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இவரது சாட்சியம் அமெரிக்க ஜனாதிபதி றேகனை பதவி இறக்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்பட்டு வந்ததனால், இந்த திடீர் நோய்பற்றி பரவலாகச் சந்தேகம் வளர ஆரம்பித்துள்ளது.

ஈரானுக்கு அமெரிக்கா ஆயுத விற்பனை குறித்தும் அதன் மூலம் கிடைத்த பணம் நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது பற்றியும் அமெரிக்க செனட் உளவுக் குழுவிரிவான விசாரணையை மேற்கொண்டு வருகிறது. (ஒ)

## வெளிநாட்டு உதவி

பீகிங், டிச. 16

கடந்த ஆறு ஆண்டுகளில் 590கோடி டாலர்களை சீனா வெளிநாட்டு உதவியாகப் பெற்றது.

வெளிநாட்டு நிதியுடன் ஆரம்பிக்கப்படும் ஏழாயிரத்து மூன்னூறு தொழில் முயற்சிகளுக்கு இந்தக் காலப்பகுதியில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (ஒ)

## கராச்சி நிலைமை கட்டுப்பாட்டில் இல்லை

கராச்சி, டிச.16

கராச்சியில் நடைபெற்ற கலவரங்களால் பலியானவர் தொகை 135 ஆக உயர்ந்துள்ளது 500 பேர் காயமடைந்தனர்.

வங்கிகள் உட்பட பல கட்டிடங்கள் நேற்றும் தீக்கிரையாகின.

குறைந்தது 10 பேர் உயிருடன் எரிக்கப்பட்டார்கள்

ஊரடங்கு அமுலில் இருந்தபோதும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குப் போதுமான இராணுவமோ பொலீஸாரோ இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா உல்ஹக்கும் பிரதமர் முகமட்கான் யூனிட்டோவும் கராச்சிக்குச் சென்றுள்ளனர். (ஒ)

## ஊரடங்கு உத்தரவு பஞ்சாப்பில் அமுல்

சண்டிகார், டிச.16

பஞ்சாப் மாநிலத்தில் சீக்கியர்களின் புனித நகரமான அமிர்தசரஸில் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பாரதிய ஜனதா கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் உட்பட மூன்று இந்துக்கள் சீக்கிய தீவிரவாதிகளால் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தலை தூக்கிய கலவரங்கள் இன்னமும் ஓயவில்லை

இந்தக் கொலைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் பொது வேலை நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பாரதிய ஜனதாக்கட்சி அறிவித்துள்ளது.

நாற்றுக்கணக்கான இந்துக்கள் நேற்று அமிர்தசரஸில் சீக்கியர்களின் கடைகளைத் தாக்கிச் சேதப்படுத்தினார்கள். பொலீஸ்நிலையம் ஒன்றும் தாக்குதலுக்குள்ளானது. (ஒ)

## கைதிகள் விடுதலை

டாக்கா டிச. 16

பங்களாதேஷ் விடுதலையின் 15ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 203 கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்,

முன்னாள் சுதந்திரப் போராளிகள் 1974ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விஷேட அதிகாரச் சட்டங்களின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர் ஆகியோரும் விடுதலை செய்யப்படுவார்கள். (ஒ)

## வெளி உலகில்

## எயிட்ஸ் நோய் ஆசியாவில் இல்லை

பாரிஸ், டிச 16

ஆசியாவில் 'எயிட்ஸ்' பயங்கர நோய் இல்லை. அந்த நோய் பரவாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பாரீஸில் உள்ள லூயிபாஸ்டர் விஞ்ஞான மருத்துவ கூடத்தில் பணியாற்றும் டாக்டர் சிங் சேர்மன் தெரிவித்தார்.

ஆபிரிக்காவில் இந்த நோயின் பாதிப்பு அதிகமாகவுள்ளது. அமெரிக்காவிலும் ஆபிரிக்காவிலும் எயிட்ஸ் மிகவேகமாகப் பரவி வருகின்றது

ஆஸிய பிராந்தியத்தில் இந்தநோய் பரவுவதை தடுக்கும் சூழ்நிலை உள்ளது. ஆசிய நாடுகளில் ஆங்காங்கே காணப்படும் எயிட்ஸ் நோய் வெளிநாடுகளில் இருந்து அங்கு செல்பவர்களால் ஏற்பட்டதாகும் எனவும் டாக்டர் சேர்மன் மேலும் தெரிவித்தார் (ஒ)

## திருட்டுப் பொருள் மீட்புப்பணி

லூசாக்கா, டிச 16

ஸாம்பியாவில் கடந்த வாரம் நடைபெற்ற கலவரங்களின் போது கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களை மீட்கும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

பொலீசார் 450பேரை ஏற்கனவே கைது செய்துள்ளார்கள், பெருந்தொகையான பொருள்களும் மீட்கப்பட்டன.

சோளதானிய உணவின் விலை நாறுசதவீதம் அதிகரிக்கப் பட்டதைத் தொடர்ந்தே கலவரங்கள் ஏற்பட்டன

ஜனாதிபதி கௌண்டா இந்த விலை அதிகரிப்பை தற்பொழுது ரத்துச் செய்துள்ளார். (ஒ)

## யுத்த நிறுத்தம் மீறப்பட்டது

மணிலா, டிச 16

பிலிப்பீன்ஸில் கம்யூனிஸ கிளர்ச்சியாளர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளார்கள்.

பிலிப்பீன்ஸின் மத்திய பகுதியில் உள்ள 'இயூ' நகருக்கு அண்மையில் உள்ள ராணுவ காவல் நிலையம் ஒன்றை சுமார் 100 கம்யூனிஸ கிளர்ச்சியாளர்கள் தாக்கி சேதப் படுத்தியுள்ளார்கள்.

60 நாள் யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் இடம்பெற்ற முக்கிய யுத்த நிறுத்த மீறல் சம்பவம் இதுவாகும். (ஒ)

## இஸ்ரவேல் அதிகாரிகள் மீது வழக்கு

தெல்அவிவ், டிச.16

பலஸ்தீனிய விடுதலை இயக்கப் பிரதிநிதிகளைக் கடந்தமாதம் ரூமேனியாவில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்திய நான்கு இஸ்ரவேல்இடதுசாரித் தலைவர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

இஸ்ரவேலின் புதிய சட்டமொன்றிற்கு அமைய பயங்கரவாத ஸ்தாபனங்களுடன் அரசாங்க அனுமதியின்றி தொடர்புகளைஏற்படுத்த முடியாது

சம்பந்தப்பட்ட நான்கு இஸ்ரவேல் இடதுசாரித் தலைவர்களும் இச்சட்டத்தை மீறியதாக நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்குக் குறையாத சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். (ஒ)

## மார்க்கோஸ் பிலிப்பீன்ஸ் செல்வாரா?

மணிலா, டிச.17

பிலிப்பீன்ஸ் முன்னாள் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸின் இளைய சகோதரியான எலிஸபெத் மார்க்கோஸ் ஜோனின் மரணச் சடங்குகளில் கலந்துகொள்ள பேர்டினன்ட் மார்க்கோஸ் பிலிப்பீன்ஸ் செல்ல விரும்பியுள்ளார். திருமதி ரொஜான் நேற்று முன்தினம் தனது 65 ஆவது வயதில் காலமானார்.

இவரது மரணச்சடங்குகளில் கலந்துகொள்ள பேர்டினன்ட் மார்க்கோஸ் அனுமதிக்கப் படுவாரா என ஜனாதிபதி அக்கினோவிடம் கேட்ட போது எதுவும் நடக்கலாம் எனத்தெரிவிதார். (ஒ)

# ஆன்ம ஈடேற்றம் தரும் ஆருத்திரா தரிசனம்

ப. சிவஞானசுப்பிரமணியம்

சிவபெருமானுக்குரிய நன்னாள் திருவாதிரைத் திருநாள். இதனால் எங்கள் பரம் பொருளுக்கு 'ஆதிரையான்' என்னும் பெயருமுண்டு.

மார்கழி மாதத்திலே வழமையாகக் கொண்டாடப்படும் 'திருவெம்பாவை'த் தினங்களில் பத்தாம் நாளாகிய இறுதி நாளிலே திருவாதிரைத்திருநாள் கொண்டாடப்படுகின்றது.

சைவ மக்கள் அனைவரும் இப்புனித நாட்களில் அதிகாலையில் துயிலெழுந்து, நீராடி, தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து, திருநீறு தரித்து, இறைவனுக்கு கந்த பத்திர புஷ்பம், பால், இளநீர், வெற்றிலை, பாக்கு, பழம், கர்ப்பூரம், சாம்பிராணி என்பன கொண்டு ஆலயத்துக்குச் சென்று அங்கு நடைபெறும் அபிஷேகம், பூஜை என்பனவற்றிற் கலந்து, மெய்ம்மறந்து வழிபாடு செய்வர்.

ஆணவ இருளினாலும், உலக வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களினாலும் அறிவிழந்து தூங்கிக் கிடக்கும் ஆன்மாக்களைத் தட்டியெழுப்பி, திருவருள் பெற வைப்பன மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவைப் பாடல்கள்.

பாவை நோன்பு நோற்கும் பருவப் பெண்கள் சிறந்த கணவரை அடைய விரும்புவது போல் ஆன்மாக்களும் உயிர்களுக்கெல்லாம் நாயகனை சிவபெருமானை அடைய விரும்புவதையே மணிவாசகர் இப்பாடல்களின் உட்பொருளாக வைத்து அதனைப் பாடியிருக்கிறார்.

ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையினாலே பரமபதியாகிய சிவபெருமான் தில்லையம்பதியிலே ஐந்தொழில்களையும் தமது திருநடனத்தின் மூலம இயற்றிக் கொண்டிருக்கின்றார். அந்த நடராஜப் பெருமானுக்கு அங்குள்ள ஆயிரக்கால் மண்டபத்திலே வைத்து இரவிரவாக முறை தவறாத அபிஷேகம் நடைபெறும்.

இந்த ஆருத்திரா தரிசனம் சைவ ஆலயங்களில் அதிகாலையிலேயே நடைபெறும். சைவமக்கள் அனைவரும் ஸ்ரீநடராஜப் பெருமானைத் தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வார்களாக

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் பெரும் வரப்பிரசாதமாகும்

சாவகச்சேரி, டிச. 17

ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும். வடபகுதியில் ஏற்பட்டுவரும் சூழ்நிலையில் இவை மக்களுக்கு நிச்சயமாக நற்பயனை அளிக்கும் தொண்டர்களும் அமைப்பாளர்களும் மேற்கொள்ளும் தன்னலமற்ற சேவைகள் மூலமே இதன் பயன்பாடு வளர்ச்சி அடையும். நோய்வந்தபின் சிகிச்சை பெறுவதைவிட நோய் அணுகாது சுகவாழ்விற்கான நெறிமுறைகளை அறிந்து நடந்துகொள்வதே புத்திசாலித்தனம்.

டாக்டர் திரு.த. சிவராசா மட்டுவில் தெற்கில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

நிலையத்தலைவி செல்வி. தனு கந்தையா தலைமையில் ஆரம்பமான இவ்வைபவத்தில் டாக்டர் திரு. நல்லையா மங்கள தீபம் ஏற்ற லயன்ஸ்கழக தலைவர் டாக்டர் பே. பிலிப் நிலையப் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்துவைத்தார்

சிறப்பு விருந்தினர்களும் டாக்டர் திரு நித்தியானந்தன், மாதர் அணி தலைவி ஆசிரியை திருமதி. ம. செல்லையா, அதிபர். க. இளையதம்பி ஆகியோரும் கருத்துரை வழங்கியதைத் தொடர்ந்து செயலாளர் செல்வி கோகிலா சிவசுப்பிரமணியம் நன்றி உரை கூறினார். (இ—31)

# தீவுப்பகுதிக்கு ஆசிரியர்களை நியமிக்குக

## கொத்தணி அதிபர் கோரிக்கை

புங்குடுதீவு, டிச.17

தீவுப்பகுதிப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை பெரிதும் நிலவுகிறது. இதனால் மாணவர்களின் கல்விநிலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. தேசிய இளைஞர் சேவை மன்றத்தின்மூலம் தெரிவு செய்யப்படும் வடபகுதி ஆசிரியர்களைத் தீவுப் பகுதிப் பாடசாலைகளுக்கு நியமிப்பதன் மூலம் இக்குறைபாட்டை ஓரளவுபோக்க முடியும். கல்வியமைச்சு இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

—இவ்வாறு கூறினார் வேலணை கொத்தணி அதிபர் திரு. மெ. சிவராஜரத்தினம்.

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப்பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆசிரியர் பற்றுக்குறையினால் தீவுப்பகுதி பாடசாலைகளை எதிர் நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அவர் இக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

வேலணை கொத்தணியின் முதன்மைப்பாடசாலையாகவிளங்கும் சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தின் அபிவிருத்தி கருதி மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்திட்டங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. (உ131)

## சுவீடிஷ் கூட்டுறவு ஆலோசகர்

யாழ்ப்பாணம், டிச, 17

கூட்டுறவு நெறித்திட்டங்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு இலங்கை வரவிருக்கும் சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஆலோசகர் திரு டலண்டின் சேவையைப் பெற்றுக் கொள்வதென ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபையினர் தீர்மானித்துள்ளனர்.

சபைத் தலைவர் திரு எம்.ஆர்.பி. தாஸ்வத்த தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப் பட்டதாக, யாழ்மாவட்ட தே. கூ. ச. தலைவர் திரு. சி. சிவமகாராசா தெரிவித்தார். (இ—5)

## பொய்யாமொழி



குறள்:

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை

மேற்சென்று செய்யப்படும்.

பொருள்:

நாவை அடக்கி விக்கல் மேலெழுவதற்கு முன்னே (இறப்பு நெருங்குவதற்கு முன்) நல்ல அறச் செயல் விரைந்து செய்யத்தக்கதாகும்.

# சித்திரவதைகளால் தொழில் வாய்ப்பு இழப்பு

மட்டக்களப்பு, டிச.17

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆயுதப் படை முகாம்களில் நடைபெறும் சித்திரவதைகளினால் விடுதலை அடைந்தும் பலர் தொழில் செய்யமுடியாதவர்களாக இருக்கிறார்கள். இந்நிலையில் சித்திரவதைகள் நிறுத்தப் படவேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்க சம்மேளனம் ஆயுதபடை இணைப்பதிகாரியை சந்தித்து வலியுறுத்தியது.

சம்மேளனம் பின்வரும் கோரிக்கைகளை உள்ளடக்கிய மகஜரை கையளித்தது.

* கைதுசெய்யப்படுவோர் முகமூடிகள் முன் ஆஜர் செய்யப்படக் கூடாது:

கைதாகிக் காணாமல் போனவர்கள் பற்றிய விடயத்தை தவிர்ப்பதற்காக விசாரணையின் பின் விடுதலையாவோர் அரச அதிபர் ஊடாக விடுதலை செய்யப்படவேண்டும்.

* பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள். தொழிலாளர்கள்மீதான விசாரணைகள் துரிதமாக்கப்பட்டு அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்படாவிடில் அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.

* சுற்றிவளைப்பு தேடுதலில் பெண்கள் இம்சிக்கப்படல் கூடாது.

* படையினர் பாதுகாப்புக்கு பொதுமக்களை பணயமாக பயன்படுத்தல் கைவிடப்பட வேண்டும்.

* முகாம்களில் நோய் வாய்ப்பட்டிருக்கும் சந்தேக நபர்களுக்கு போதிய மருத்துவ வசதி வழங்கப்பட வேண்டும்.

* கைதுசெய்யப்படுவோர் பெயர் விவரம் அரச அதிபருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* உயிரிழப்பவர்களின் சடலங்கள் மத கிரியைகளுக்காக உறவினர்களிடம் கையளிக்கப்படவேண்டும். (இ—21)

## வேலணையில் கோழிகளுக்கு தடுப்பூசி

வேலணை, டிச.17

வேலணை கால் நடை வளர்ப்போர் சங்கம் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் கோழிகளுக்குத் தடுப்பூசி ஏற்ற முன்வந்துள்ளது.

தடுப்பூசி ஒவ்வொரு சனிக்கிழமைகளில் அந்த அந்த இடங்களில் வைத்து ஏற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளைப் போடுவதற்கு விரும்புவோர் வேலணை கால்நடை வளர்ப்போர் சங்க செயலாளரும், மிருகவைத்தியருமான செ. மாணிக்கவடிவேல் என்பவருடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ—16 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
* Processing Free (நெகடிவ் செய்ய இலவசம்)
* வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

# உதயன்

17 : 12 : 1986 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

## தமிழ் பகுதியில் மூளைக்காய்ச்சல்
## வேகமாகப் பரவும் ஆபத்து!

அலுவலகச் செய்தியாளர்:-

யாழ்ப்பாணம், டிச. 17
தமிழ்ப் பகுதிகளில் மூளைக் காய்ச்சல் நோய் வேகமாகப் பரவி வருகிறது.

பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களே இந் நோய்க்குப் பெரிதும் ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் இந் நோய் வேகமாகப் பரவி வருகிறது.

கடந்த வாரத்தில் மட்டும் இந் நோயால் பீடிக்கப்பட்ட இருபது சிறுவர்கள் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் ஒரு வார காலத்தி

கே. இரத்தினராஜசிங்கம்

னுள் இரண்டு சிறுவர்கள் இந்நோய்க்குப் பலியாகியுள்ளனர்.

"கியூலக்ஸ்" என்ற இன நுளம்பினாலும், பன்றிகளினாலுமே இந்நோய் வேகமாகப் பரவுகின்றது என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன (உ-10)

## வவுனியாவில் 7 பேர் விடுதலை

யாழ்ப்பாணம் டிச 17
வவுனியா மாவட்டத்தில் படையினரால்கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஏழுபேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்

விடுதலை செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

ஏ. தெய்வேந்திரன் (குழமுழுனை) வி. இளங்கோ (குழமுழுனை) சோலையன் யோகராசா (வேப்பங்குளம்) சுவில் இரத்தினம் (வவுனியா) கணபதிப்பிள்ளை பரராசசிங்கம் (சணுவங்கேணி) முருகேசு இராஜேந்திரம் (வவுனியா), தம்பிராசா இராஜேந்திரம் (வவுனியா) (உ-10)

## மீண்டும் ஸ்ரீ லங்கா தபால்தலைகள்

யாழ்ப்பாணம், டிச. 17
யாழ் குடாநாட்டில் உள்ளூர் தபால் சேவைகளுக்கு மீண்டும் ஸ்ரீலங்கா தபால் தலைகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

ஈ பி. ஆர். எல். எவ் இயக்கம் செயல் இழந்ததையடுத்து அவர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட ஈழம் தபால் தலைகளை மக்கள் உபயோகிப்பது வெகுவாகக் குறைந்துவிட்டது. (உ-10)

## மாகாணசபைகளை எதிர்த்து
## மூவாயிரம் பிக்குகள் பங்குபற்றும்கூட்டம்

கொழும்பு, டிச 17
மாகாணசபை யோசனையை எதிர்த்து மகாசங்கம் நடத்தும்பொதுக் கூட்டம் நாளை வியாழன் கோட்டே விகாரையில் நடைபெற உள்ளது.

வண. கோபிததேரர் தலைமை வகிப்பார். சுமார் 3,000 பிக்குகள் கலந்து கொள்வர்.

நாட்டை 18 ஆக பிரிப்பதன் மூலம் சிங்கள இனத்தை அடிமையாக்கும் செயலில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பதை மக்களுக்கு அறுவுறுத்துவதே மகாசங்கத்தின் நோக்கம் என்று வண, சோபித தேரர் சொன்னார்

அஸ்கிரிய பீடாதிபதி உட்பட பிரபல பௌத்த பீடாதிபதிகளும் கூட்டத்தில் கலந்து கொள்வர். (உ-ஐ-எ)

## பிணக்கு இல்லாத பிரதேசம்

கொழும்பு, டிச. 17
1985 ஆம் ஆண்டில் இலங்கை முழுவதும் 12,895 தொழில் வழக்குகள் தொழில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன.

நாட்டில் உள்ள 18நீதிமன்றங்களில் இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

ஆனால் யாழ் மாவட்ட தொழில் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத்தானும் 1985 இல் தாக்கல் செய்யப்படவில்லை. (உ-ஐ-எ)

## அமைச்சர் முஹம்மது அவசர விஜயம்
### கல்முனை நிலைமையை அவதானித்தார்

அம்பாறை, டிச. 17
போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச். முஹம்மது நேற்றுக்காலை கல்முனை நகருக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

ஹெலிக்கொப்டர் மூலம் கல்முனை சென்ற அமைச்சரை காரில் அழைத்துச் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைக் காண்பித்தார் கல்முனை எம்.பி. ஜனாப் மன்சூர்.

பின்னர் கல்முனை சாஹிராக் கல்லூரியில் முஸ்லிம் மக்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் அமைச்சர் பேசினார்.

'கல்முனையில் முஸ்லிம்கள் மீது பொலீசார் நடத்திய தாக்குதல் குறித்து பகிரங்க - சுதந்திர-நீதி விசாரணை நடத்த வேண்டும்,

'இக் கோரிக்கையை நான் அமைச்சரவைக் கூட்டத்தில் வலியுறுத்துவேன்

'பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசிடம் இருந்து நட்டஈடு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பேன்'-இப்படி அமைச்சர் தனது உரையில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைச்சர் ஆறுதல் சொன்னார். (உ-எ-14)

### கல்முனை அசம்பாவிதங்கள்:-
## ஆலய சேதம் பற்றி முறையிட ஏற்பாடு

அம்பாறை, டிச. 17
கடந்த சனிக்கிழமை கல்முனையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின்போது தரைமட்டமாக்கப்பட்ட தரவை அம்மன் கோவில் நஷ்டங்கள் பற்றிய விவரங்களை இந்து சமய விவகார அமைச்சுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னாள் உறுப்பினர் திரு. வேல்முருகு இவற்றைச் சேகரித்து வருகிறார்.

ஆலயத்தினுள் இருந்த தங்கச்சிலை மற்றும் பெறுமதிமிக்க பொருள்கள் எரிந்தும் காணமலும் போய்விட்டன என்று கூறப்படுகிறது.

இச்சம்பவங்கள் பற்றி ஜனாதிபதிக்கும் இந்து சமய விவகார அமைச்சருக்கும் முறையிட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன, (உ-எ-14)

## பலர் விடுதலை

யாழ்ப்பாணம், டிச. 17
புலிகளிடம் சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட பல ஈ பி. ஆர் எல். எவ் உறுப்பினர்கள் புலிகளின் விசாரணையின் பின் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த நான்கு நாட்களிலும் ஆயிரக் கணக்கான ஈ.பி.ஆர்.எல்.எவ் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு அல்லது சரணடைந்து புலிகளின் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். (உ-10)

## வல்வெட்டித்துறையில் இராணுவம் சுட்டு வயோதிபர் படுகாயம்

வல்வட்டித்துறை டிச.17
நேற்றுக்காலை 6மணியளவில் வல்வட்டித்துறை இராணுவ முகாமில் இருந்துவந்த துப்பாக்கிச் சுட்டினால் வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

ஊரிக்காட்டைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அப்புத்துரை (வயது 67) என்பவரே படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இவர் ஒரு விவசாயி நெற்கொழுவைரவர் கோயில் வீதியால் சைக்கிளில் தோட்டத்தைப் பார்வையிடச் சென்று கொண்டிருந்த சமயத்தில்தான் வல்வை முகாமில் இருந்து ஒசைஇன்றி வந்த துப்பாக்கிக் குண்டுக்குஅவர் இலக்கானார்.

அவசரசத்திர சிகிச்சை செய்யப்பட்டு அவரின் காலில் பாய்ந்து இருந்த குண்டு அகற்றப்பட்டது.

இச்சம்பவத்தின் பின்னர் வல்வை இராணுவ முகாமில் இருந்து கொம்மாந்தறை, நெற்கொழு போன்ற இடங்களை நொக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வண்ணம் இருந்தன. (உ-எ-160)

## புதிதாகச் சிலைகள்!
### பாரதிக்கு டில்லியில்;
### வள்ளுவருக்கு குமரியில்;

சென்னை, டிச 17
புதுடில்லியில் பாரதி நகரில் மகாகவி பாரதி சிலை பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி பிரதமர் ராஜீவ் காந்தி யினால் திறந்து வைக்கப்படும்.

தமிழக முதலமைச்சர் எம். ஜி இரமச்சந்திரன் முன்னிலையில் இத்திறப்பு விழா இடம்பெறும்.

3 லட்சம் ரூபா செலவில் வார்க்கப்பட்ட பாரதியாரின் வெண்கலச்சிலை ஏற்கனவே ரயில்மூலம் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டு விட்டது.

இத்தகவலை தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் திரு, வி. வி. சுவாமிநாதன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதே வேளை:
கன்னியா குமரியில் விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு அருகில் உள்ள பாறை ஒன்றில் 75 அடி உயரத்திலான திருவள்ளுவர் சிலையை நிறுவ தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதற்கு 4 கோடி ரூபா செலவாகும் என்று அரசு மதிப்பிட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளில் சிலை நிறுவப்பட்டு முடிந்து விடும் என்று அறிவிக்கப்பட்டது

செப்புத் தகட்டில் அமைக்கப்படவிருக்கும் சிலையின் உட்புறம் வெறுமையாக இருக்கும்.

## வவுனியாவில் ஹெலி ரோந்து

யாழ்ப்பாணம் டிச 17
வவுனியாவில் நேற்று ஹெலிக்கொப்டர் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

வழமைக்கு மாறுக நேற்று பல பகுதிகளிலும் ஹெலிக்கொப்டர்கள் அதிக நேரம் தாழப்பறந்து சுற்றி வட்டமிட்டன (உ-10)

## கைக்குண்டு வெடித்து போராளி மரணம்
### குருநகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிச. 17
தவறுதலாக விழுந்து வெடித்த கைக்குண்டு ஒன்றினல் போராளி ஒருவர் பலியானார். பெண் உட்பட இருவர் காயமடைந்தனர்.

நேற்று குருநகர்ப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

இக்குண்டு வெடிப்பு காரணமாக சம்பந்தப்பட்ட வீடும் பலத்த சேதம் அடைந்துள்ளது,

பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட மூவரில் ஒருவர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

மற்றைய ஒருவரின் நிலையுக் கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-10)

## நாளை முதல் மறியல் போர்

யாழ்ப்பாணம், டிச,17
நாளை வியாழக்கிழமை முதல் வடபகுதி மக்கள் வங்கிக்கிளைகள் அனைத்து முன்பாகவும் அடகு வைத்தோர் சங்கத்தினல் காலவரையின்றி மறியற் போராட்டம் நடத்தப்படும்.

அடகு நகைகள் அனைத்தையும் உரியவர்களிடம் மீளளிப்பதற்கு வங்கி நிர்வாகம் உறுதியான நடவடிக்கை எடுக்கும்வரை மறியற் போராட்டம் தொடரும் என்றும் சங்கம் அறிவித்துள்ளது. (உ-10)

## ஆசிரியர்...
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கஷ்டப்பிரதேஷங்களில் உள்ள சுமார் 3,000 ஆசிரியர் இடமாற்றம் கோரி விண்ணப்பித்து இருக்கின்றனர். என்றும் அமைச்சு வட்டாரங்கள் கூறின. (உ-ன)

## அம்பாறையில்
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூடப்பட்டிருந்தன. தமிழ் வர்த்தகர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர்

அரச, தனியார் பஸ் போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன.

அரச, தபால், வங்கி அலுவலகங்களும் நேற்று இயங்கவில்லை.

கல்முனையில் பொலீஸாரின் ரோந்து இருந்தது. மயான அமைதி நிலவியது.

கடந்த சனிக்கிழமை கல்முனையில் பொலீஸார் நடத்திய தாக்குதலில் மூன்று முஸ்லிம்கள் உயிரிழந்தனர்.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான உடைமைகள், வீடுகள் சேதம் அடைந்தன; எரிக்கப்பட்டன.

கல்முனைச் சம்பவத்தில் உயிரிழந்த மூன்று முஸ்லிம்களுக்கும் பள்ளிவாசல்களில் திங்கள் மாலை துவாப் பிரார்த்தனை இடம்பெற்றது. (உ-எ-14)

## ராஜீவ் விதித்த காலக்கெடுவுக்கு கண்டனம்

சென்னை, டிச. 17
இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று பிரதமர் காந்தி காலக்கெடு வைத்துள்ளது விலக்கப்பட வேண்டும்.

இப்படி 'இந்து' நாளிதழ் கருத்துத் தெரிவித்துள்ளது.

பெங்களூரில் நடந்த சார்க் மாநாட்டின் பின்னர்தான் இந்தியப் பிரதமர் இக்காலக் கெடுவை நிர்ணயித்து இருந்தார்.

இலங்கை யோசனையை ஏதாவது ஒரு வகை திருத்தங்களுடன் போராளிகளை ஏற்க வைக்கவேண்டும் என்ற கருத்துப்பட செயலாற்றி வரும் தொனி இக்காலக்கெடு விதிக்கப்பட்டதில் இருந்து தெரியவருகிறது.

இக்காலக்கெடு போராளிகளை நிர்ப்பந்திக்கும் முயற்சியாகுமோ என்று எண்ணவேண்டியுள்ளது.

காலக்கெடு நிபந்தனையை விலக்கிக்கொள்ள வேண்டும்.

— இப்படி 'இந்து' செய்தி தெரிவிக்கிறது. (உ-ஐ-எ)

## வரியிறுப்பாளர் சங்கம் புனரமைப்பு

யாழ்ப்பாணம் டிச 17
செயலிழந்துள்ள உரும்பராய் ஊரெழு வரியிறுப்பாளர் சங்கம் மீண்டும் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான குழு ஒன்று அண்மையில் நியமிக்கப்பட்டது.

உரும்பராய் கிழக்கு ஞானவைரவர் கோயிலடி வாசிகசாலையில் விழிப்புக்குழுத் தலைவர் திரு த, கந்தையா அமைப்பாளராக இருந்து ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் இக்குழு நியமிக்கப்பட்டது. (இ-எ)

## ஓவியப்பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம் டிச 17
யாழ். மாவட்ட காலாசாரப் பேரவையின் ஓவியக்குழு நடத்தும் ஓவியப் பயிற்சி வகுப்பு சம்பிரதாய பூர்வமாக 18-12-86ந் திகதி வியாழக்கிழமை காலை 8.45 மணிக்கு இல111, இரண்டாம் குறுக்குத் தெரு ஓவியக்கலா நிலையத்தில் யாழ். மாவட்ட கலாசாரப் பேரவைத் தலைவர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்படும் (உ-10)

## பீக்கிங் பயணம்

யாழ்ப்பாணம், டிச. 17
இரண்டு வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்ட செயலாளர் திரு பொன் குமாரசாமி இன்று 17ஆம் திகதி பீக்கிங் பயணமாகிறார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பை ஏற்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. பீட்டர் கெனமன், கட்சியின் சர்வதேச செயலாளரும் கலவானைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. டி. ஈ. டபிள்யு. குணசேகரா, கட்சியின் அரசியல் குழு உறுப்பினரும் யாழ் மாவட்ட செயலாளருமான திரு. பொன் குமாரசாமி ஆகியோர் இன்றுவிமான மூலம் பீக்கிங் பயணமாகின்றனர். (உ-10)

## மின் தடை
### இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

யாழ்நகரில் இருந்து ஆஸ்பத்திரி வீதி ஊடாக கொன்வென்ட் உப-மின் நிலையத்திற்கு நிலத்தின் ஊடாக வரும் அதி சக்தி வாய்ந்த மின்வடம் (11000 Volts) பழுதடைந்த காரணத்தினால் கடந்த சில நாட்களாக கொன்வெண்ட், குருநகர். பாசையூர் போன்ற இடங்களுக்கு இரவு நேரங்களில் மின் தடை ஏற்பட்டுள்ளது. எனவே இப்பழுதடைந்த வடத்தைத் திருந்துவதற்கு சில நாட்கள் செல்லும் என்ற காரணத்தினாலும் தற்பொழுது நன் முறையில் இயங்கிவரும் ஒரே ஒரு மின் வடத்தைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளபடியாலும்; இன்னும் சில தினங்களுக்குப் பின்வரும் ஒழுங்கின் பிரகாரம் மாலை 6 மணியில் இருந்து காலை 6 மணி வரை கீழ்க் குறிப்பிட்ட உப மின் நிலையங்களுக்கு மின் தடை ஏற்படும் என்பதனை இதனல் அறியத்தருகின்றேன்

| உப மின் நிலையங்களின் பெயர்: | மின் தடை ஏற்படும் திகதி: |
|---|---|
| (1) கச்சேரி, கனகரெத்தினம்) புங்கங்குளம் ) அரியாலை; உப்புக்குளம் ) | 16-12-1986 (செவ்வாய்) 19-12-1986 (வெள்ளி) |
| (2) பலாலி வீதி, ) வைமன் வீதி, நல்லூர் ) றக்கா ரோட் ) | 17-12-1986 (புதன்) 20-12-1986 (சனி) |
| (3) கொன்வெண்ட்,குருநகர்,) சீநோர் ) பாசையூர், குருநகர் ) வீட்டுத் திட்டம் ) | 18-12-1986 (வியாழன்) 21-12-1986 (ஞாயிறு) |

இம் மின் தடையால், சம்பந்தப்பட்ட இடங்களில் உள்ள சகல மின் நுகர்வோருக்கும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மனவருத்தத்தை தெரிவித்துக்கொள்ளுகின்றது.

இப்படிக்கு,
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்.
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்,

## தமிழர் .
(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மில்லை.

கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிக்கும் இலங்கை அரசின் யோசனைகளை ஏற்க முடியாது.

இலங்கை அரசின் யோசனைகள் எமக்குத் திருப்தி தருவனவாக அமையவில்லை.

இப்படி ஆறு தமிழர் அமைப்புக்களும் இந்தியக் குழுவிடம் தெரிவித்தன.

பேச்சுக்களின் முடிவில் இணை அமைச்சர் ப, சிதம்பரம் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

தமிழரின் விருப்பங்கள் இலங்கை அரசிடம் தெரிவிக்கப்படும் என்று திரு. சிதம்பரம் அப்போது சொன்னார். (உ-எ)

## அமைச்சர்...
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி:-

பத்மநாபா, கேதீஸ்வரன், வரதராஜப் பெருமாள்.

தமிழீழ விடுதலை இயக்கம்:-

செல்வம், சார்ள்ஸ்.

தமிழர் விடுதலைக் கூட்டணி:-

அ. அமிர்தலிங்கம், இரா. சம்பந்தன், யோகேஸ்வரன். (உ-எ)

## தமிழர் அமை-
(1ம் பக்கத் தொடர்ச்சி)

டன

அதைத் தொடர்ந்தே இணை அமைச்சர் குழு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனிடம் முன்கண்ட வேண்டுகோளை விடுத்தது.

புதுவருடம் பிறப்பதற்கு முன்னர் ஒரு தீர்வு காணக்கூடியதாக தமிழர் அமைப்புக்கள் ஒருபடி இறங்கி வர முதலமைச்சர் இராமச்சந்திரன் தனது செல்வாக்கைப் பிரயோகிக்க வேண்டும்.

இப்படி முதலமைச்சரைத் தனியாகச் சந்தித்து இணை அமைச்சர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

சென்னையில் இருந்து கிடைத்த செய்திகள் இவ்வாறு தெரிவித்தன (அ-ஐ-எ)

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

கொழும்பு, டிச. 17
விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் புதிதாக நேற்று ஆரம்பமாகின.

கலால் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் இருவருக்கு எதிரான முறையீடுகள் முதல்நாள் விசாரணையின்போது எடுத்துக் கொள்ளப்பட்டன.

நீதியரசர்கள் திரு. பேர்ஸி கொலின்தோமி (தலைவர்), திரு. ஆர். வனசுந்தர, திரு எச்.டி. தம்பையா ஆகியோர் ஆணைக்குழுவின் அங்கம் வகிக்கிறார்கள். (உ)

## பிரயாண ஒழுங்குகள்

லண்டன் - ஜேர்மனி - நோர்வே
கனடா - சிங்கப்பூர்
சவூதி அரேபியா (வேலை வாய்ப்புடன்)

மேற்குறிப்பிட்ட நாடுகட்கு செல்ல விரும்புவோர்க்கு உடனடி ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். இம்மாதம் 22 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

சிங்கப்பூர்
தொழில் வாய்ப்புடன் செல்ல விரும்பும் பெண்கள் உடன் தொடர்பு கொள்ளவும். துரித கதியில் அனுப்பி வைக்கப்படும்.

TRI STAR TRAVELS
ரை ஸ்ரார் றவல்ஸ்

யாழ்நகர் நிலைமை சீரற்று எமது அலவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.

1. 71 குருசோ வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
2. V. குகராஜா, மயிலியற்புலம் கந்தசாமி கோயிலடி.
3. N. தயாளன், மயிலிட்டி வடக்கு, சுன்னாகம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 17 - 12 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power-House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60, N 86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org